ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## எங்களாழ்வான் - வருஷதிருநட்சத்திரம் - சித்திரை – ரோகிணி



எங்களாழ்வான் (திருவடியில் நடாதூரம்மாள்) - திருவெள்ளறை -அவதாரஸ்தலம்

### தனியன்

ஸ்ரீவிஷ்ணு சித்த பதபங்கஜ ஸங்கமாய சேதோ மம ஸ்ப்ருஹயதே கிமத: பரேண /
நோ சேந்மமாபி யதிசேகர பாரதீநாம் பாவ: கதம் பவிதுமர்ஹதி வாக்விதேய : //

## வாழித்திநாமம்

சீராரும் வெள்ளறையில் சிறந்துதித்தோன் வாழியே
சித்திரை உரோகிணி நாள் சிறக்கவந்தோன் வாழியே
பார்புகழும் எதிராசன் பதம் பணிந்தோன் வாழியே
பங்கயச்செல்வியின் பதங்கள் பரவுமவன் வாழியே
திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவருளோன் வாழியே
தீதிலா பாடியத்தைத் தேர்ந்துரைப்போன் வாழியே
தாரணியில் விண்டு மதம் தழைக்கவந்தோன் வாழியே
தண்ணிளியோன் எங்காளழவான் தாளிணைகள் வாழியே.

அதாரஸ்தலம் - திருவெள்ளறை
திருநாமம் - ஸ்ரீவிஷ்ணு சித்தர்
ஆசாரியன் - எம்பெருமானார், திருக்குருகைப்பிரான் பிள்ளான்
சிஷ்யர்கள் - வாத்ஸ்ய வரதாசார்யர் என்னும் நடாதூரம்மாள் (நடாதூராழ்வான் பேரர்)

இவர் ஸ்ரீபாஷ்ய உபந்யாஸத்தில் வல்லவர். விஷ்ணுபுராணத்துக்கு `விஷ்ணுசித்தீயம்' என்னும் வ்யாக்யானத்தை அருளியுள்ளளார். நஞ்சீயருடைய திருவராதனப் பெருமாளாகிய ஆயர்தேவு இவருடைய கனவில் வந்து நான் ஜீயர் மகன் ஆயர்தேவு. எனக்கு வெண்ணெய், நாவல் பழம் கொடும் என்று கேட்டு அடிக்கடி தூக்கத்தைக் கெடுத்தார். இதுபற்றி இவர் நஞ்சீயரிடம் முறையிட்டார். அதைக் கேட்ட நஞ்சீர் யாருமறயாதபடி நமது திருவாராதனப் பெருமாளுக்கு ஆயர்தேவு என்று பெயர் வைத்திருக்க, அதை உலகமயறியச் செய்வதற்காக எம்பெருமான் இப்படிச் செய்வதா! என்று வியந்ததாக ஐதிஹ்யம் உள்ளது. நஞ்சீயரும், நம்பிள்ளையும் இவர் காலத்தில் வாழ்ந்தார்கள். திருக்குருகைப்பிரான் பிள்ளானிடம் திவ்யப்ரபந்த காலசேஷபம் கேட்டார். எங்களாழ்வானுக்கு சரமதசையில் செங்கமலநாச்சியார் என்ற பெண்மூலம் பிறந்த தௌஹித்ரனுக்கு (பேரனுக்கு) வரதாசார்யர் என்னும் தம் திருநாமத்தையேயிட்டு ஸ்வீக்ருகபுத்ரா் ஆக்கினார். அவரைக் கொண்டு நடாதூரம்மாள் சரம கைங்கர்யங்கள் நடத்தியருளினார். அவருக்கு சகல அர்த்தங்களும் கற்பித்து வைத்தார். அவரது பரம்பரை இன்றும் தொடர்ந்து வருகிறது.

## எங்களாழ்வான் என்று பெயர் வரக்காரணம்

திருவெள்ளறையில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண குலத்தில் ஸ்ரீவிஷ்ணு சித்தர் என்னும் திருநாமத்துடன் சித்திரை மாதம் ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித்தார் இந்த மஹாசார்யர். கூரத்தாழ்வான் கண் இழந்தபின்பு மேல் நாட்டிலிருந்து (மேல்கோட்டை திருநாராயணபுரத்திலிருந்து) ஸ்ரீரங்கத்திற்கு திரும்பிய யதிராஜர் ஸ்ரீபாஷ்யமத்தில் எஞ்சிய பகுதியைக் கூரத்தாழ்வானுக்கு பதிலாக ஸ்ரீவிஷ்ணுசித்தரை உசாத் துனையாகக் கொண்டு எழுதி முடித்தார். அப்படி எழுதும்போது ஆழ்வானுக்கு துல்யமாயிருந்த இவருடைய மேதா விலாசத்தைக் கண்டு எங்கள் ஆழ்வானோ என்று எம்பெருமானர் அபிமானித்ததாக கர்ணபரம்பரைச்செய்தி கூறும்.

## இவர் அருளியுள்ள க்ரந்தங்கள்

74 ஸிம்ஹாசநாதிபதிகளில் ஒருவராய் எம்பெருமானாரால் நியமிக்கபெற்ற இவர் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்கு விஷ்ணு சித்தீயம் என்னும் வ்யாக்யானத்தையும், ஸித்தாந்த ப்ரமேயங்களைச் சுருக்கி ப்ரேமேய ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தையும், ப்ரஹ்மஸூத்ரத்தின் அதிகரணங்களின் ஸங்கதியை (தொடர்ச்சியை) விளக்கி ஸங்கதிமாலா என்னும் க்ரந்தத்தையும், கத்ய வ்யாக்யானம் ஒன்றையும் வடமொழியில் எழுதிஉள்ளார். மணிப்ரவாளநடையில் ஸாரார்த்த சதுஷ்டயம் என்னும் ரஹஸ்யம் வார்த்தாமாலையில் ஒரு வார்த்தையாக உள்ளது. இவற்றில் ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்யானம் ஒன்றே இப்போது உள்ளது.

## இவரை `அம்மாள் ஆசாரியன்' என்று அழைப்பதன் காரணம்

ஒருநாள் நாடாதூரம்மாள் நடாதூர் ஆழ்வானிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் சொல்லும்படி கேட்டார். அதற்கு அவர், (முதுமையின் காரணமாக), நீ திருவெள்ளறை சென்று எங்களாழ்வானிடத்தில் கற்றுக் கொள் என்று சொன்னார். அதன்படி நாடாதூரம்மாளும் எங்களாழ்வான் திருமாளிகைக்குச் சென்று கதவைத் தட்டினார். உள்ளிருந்து எங்களாழ்வான் யார் வந்திருப்பது என்று கேட்க அதற்கு நாடாதூரம்மாள் `நான் தான் வந்திருக்கிறேன்' என்று பதில் சொன்னார். இதைக் கேட்ட உடனே எங்களாழ்வான் `நான் செத்த பிறகு வாரும்' என்று பதில் கூறினார். நான் என்னும் அஹங்காரம் செத்த பிறகு வா என்ற உட்கருத்தை அறியாத வரதர் காஞ்சிபுரத்திற்கு திரும்பிச் சென்று நடாதூர் ஆழ்வானிடம் நடந்த வற்றை எல்லாம் சொன்னார். இதைக் கேட்ட நடாதூர் ஆழ்வான் பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசவேண்டும் என்று சொல்லி `நான் என்பதற்கு பதிலாக அடியேன்' என்று பெரியோர்களிடம் பௌயமாக பேசவேண்டும் என்று அறிவுறித்தி, இவரை மீண்டும் திருவெள்ளறைக்கு போகும்படி சொல்லி, அவர் கேட்பதற்கு அடியேன் என்று பதில் சொல்லச் சொன்னார். அதன்படி இவரும் அவரிடம் நடந்து கொண்டார். எங்களாழ்வானும் இவரை தம் சிஷ்யராக ஏற்றுக் கொண்டு பகவத்விஷயத்தை இவருக்கு அருளினார். இதனால் எங்களாழ்வான் நாடாதூரம்மாளுக்கு ஆசாரியன் ஆனார். அதன் காரணமாகவே எங்களாழ்வான் அம்மாள் ஆசாரியர் என்று அழைக்கப்டார். நாடாதூரம்மாளும் இவரிடம் கேட்ட பகவத்விஷயத்தை தம்முடைய பல சிஷ்யர்களுக்கும் தேவப்பெருமாள் சன்னதியில் சொல்லிக் கொடுத்தார். இவர் திருவம்சத்தில் அவதரித்தவர்கள் `அம்மாள் ஆசார்யர்' என்று அழைக்கடுகிறர்கள். திருவெள்ளரையிலும், திருவரங்கத்திலும் இந்த திருவம்சத்தில் வந்தவர்கள் பல கைங்கர்யங்கள் செய்து வருகிறார்கள். அவர்களுள் வர்த்தமான ஸ்ரீ உ.வே அம்மாள் ஸௌம்ய நாராயணாசாரியார் ஸ்வாமியும் ஒருவர் ஆவார். இவரும் பல க்ரந்த நூல்களுக்கு உரை எழுதியும், பல நூல்கள் எழுதியும் ஸ்ரீவைஷ்ண சம்ப்ரதாயத்தை வளர்த்து வருகிறார். இவர் ஆசார்யபீடத்தில் இருந்து கொண்டு பஞ்சஸம்ஸ்காரம் செய்து பல சிஷ்யர்களை உஜ்ஜீவிப்பித்துக் கொண்டு இருக்கிறார். (மேலே சொன்ன விஷயங்கள் ஆசார்ய வைபமஞ்ஜரில் இருந்து எடுக்கப்பட்டது)

எங்களாழ்வான் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: